அரசினர் பொறியியற் கல்லூரி,

பர்கூர் – 635 104.

கடித எண். 255/நி4/2025　　　　நாள்:27.02.2025

## ஏல விளம்பரம்

பர்கூர், அரசினர் பொறியியற் கல்லூரி வளாகத்தில் உள்ள நகலகம் மற்றும் எழுதுபொருள் அங்காடியினை 01.04.2025 முதல் 28.02.2026 வரை 11 மாத காலம் ஏலம் எடுத்து நடத்திடும் பொருட்டு கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் அவற்றிற்கெதிரே குறிப்பிட்டுள்ள நாள் மற்றும் நேரத்தின்படி பர்கூர், அரசினர் பொறியியற் கல்லூரி முதல்வர் அவர்களால் நியமிக்கப்படும் ஏலக்குழு முன்னிலையில் பகிரங்க ஏலம் விடப்படும். ஏலம் கோர விருப்பமுள்ளவர்கள் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு ஏலத்தில் கலந்து கொள்ளலாம்.

**ஏலம் நடத்தப்பட உள்ள நகலகம் மற்றும் இதர விவரங்கள்**

| வ. எண் | ஏலம் நடத்தப்பட உள்ள இனங்களின் விவரம் | கட்டிடத்தின் பரப்பு மற்றும் அதன் விவரம் | டெபாசிட் தொகை ரூ. | டெபாசிட் தொகை DD/Cash ஆக செலுத்த வேண்டிய நாள் | ஏலம் நடத்தப்பட உள்ள இடம், நாள் மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | நகலகம் மற்றும் தொலைத் தொடர்பகம் (எழுதுபொருள் அங்காடி) | தரைத்தளம் 36.91 ச. மீ | ரூ.20,000/- | 14.03.2025 | 14.03.2025 காலை: 11.30 முற்பகல் அரசினர் பொறியியற் கல்லூரி வளாகம், பர்கூர். |

## நிபந்தனைகள்

1. ஏலம் கோர விரும்புபவர்கள் மேற்காணும் இனத்திற்கு டெபாசிட் தொகை செலுத்த வேண்டும். டெபாசிட் தொகையை செலுத்திய நபர்கள் மட்டுமே ஏலத்தில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்கள்.
2. ஏலம் கோருபவர்கள் குறைந்தபட்சமாக நிர்ணயிக்கப்பட்ட தொகை ரூ. 3,144/- அடிப்படையாக கொண்டு ரூ.500 இடைவெளியில் ஏல தொகையினை உயர்த்தி கோர வேண்டும்
3. நகலகத்தை நடத்த அதிக பட்சம் ஏலம் கோருபவர்கள் ஏலம் முடிந்தவுடன் ஏலத்தொகையை உடனே கல்லூரி அலுவலகத்தில் செலுத்த வேண்டும்.
4. மேலும் ஏலத்தில் பங்கேற்கும் நபர்கள் முன் அனுபவத்துடன் நிறுவனத்தின் பெயரில் GSTN எண் கொண்ட சான்றிதழ் கண்டிப்பாக இருத்தல் வேண்டும்.

5. ஏலத்தில் அதிக தொகையை எடுத்து தேர்வாகும் நிறுவனத்தின் உரிமையாளர் மின்சாரக் கட்டணம் செலுத்த ஏதுவாக, தனி மீட்டர் பொருத்தி மின்சாரத்தினை அளவீடு செய்து வணிக பயன்பாட்டிற்கான மின்சாரக் கட்டணத்தை செலுத்த வேண்டும் என்ற விவரம் தெரிவிக்கப்படுகிறது.

6. நகலகம் நடத்துவதற்குண்டான தொழில்வரி மற்றும் இதர வரிகளை செலுத்த வேண்டும்.

7. ஏலத்தொகையை பெற்றுக்கொள்ளவோ அல்லது மறுக்கவோ கல்லூரி முதல்வருக்கு அதிகாரம் உண்டு.

8. ஏலம் தொடர்பாக அனைத்து முடிவுகளும் கல்லூரி முதல்வர் எடுக்கும் முடிவே இறுதியாகும்.

9. நகலகத்தை விரிவாக்கம் செய்யவோ, இடிக்கவோ அனுமதி கிடையாது. மீறினால் உரிய இழப்பீடு வசூலிக்கப்படும்.

10. நகலகம் நடத்த ஏலம் எடுத்த நபர்களே நிர்வகிக்க வேண்டும்- வேறு நபர்களுக்கோ அல்லது அதிக தொகைக்கென மூன்றாவது நபருக்கு விடுவது தெரியவந்தால் உரிய அரசு விதிமுறைகளின்படி வழங்கப்பட்ட ஆணை உடனடியாக இரத்து செய்யப்பட்டு அன்றே காலி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

11. நகலத்திற்கு வெள்ளை அடித்தல் மற்றும் வர்ணம் பூசுவது போன்றவற்றை ஏலதாரரே மேற்கொள்ள வேண்டும்.

12. ஒப்பந்த காலம் முடிவடையும் நாளன்றோ அல்லது முதல்வர் அவசர நிலையின் காரணமாக காலி செய்ய கோரும் நாளன்றோ எவ்வித காரணமும் தெரிவிக்காமல் உடனடியாக நகலகத்தினை காலி செய்து ஒப்படைக்க வேண்டும்.

13. ஏலம் எடுக்கும் நபர் முதல்வர் விதிக்கும் அனைத்து நிபந்தனைகளுக்குட்பட்டு நகலகத்தினை நடத்த வேண்டும்.

ஒம்/- முனைவர். வ. திருநாவுக்கரசு,
முதல்வர்(மு.கூ.பொ).

<u>பெறுநர்</u>

| | | |
|---|---|---|
| 1 | மாவட்ட ஆட்சியர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கிருஷ்ணகிரி அவர்களுக்கு தகவலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது. | |
| 2 | வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், பர்கூர். | |
| 3 | ஆணையாளர், பர்கூர் ஊராட்சி ஒன்றியம், பர்கூர். | |
| 4. | தனி அலுவலர், ஊராட்சி அலுவலகம், B.R.G. மாதேப்பள்ளி | ஏல விளம்பரத்தை தங்கள் அலுவலக அறிவிப்புப் பலகையில் ஒட்டி விளம்பரப்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. |
| 5. | செயல் அலுவலர், பேரூராட்சி அலுவலகம், பர்கூர். | |
| 6. | முதல்வர், அரசினர் ஆண்கள் கலைக்கல்லூரி, கிருஷ்ணகிரி. | |

| | | |
|---|---|---|
| 7. | முதல்வர்,<br>அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி, கிருஷ்ணகிரி – 635 001. | |
| 8. | முதல்வர்,<br>அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி, கெலமங்கலம் – 635 113. | |
| 9. | முதல்வர்,<br>அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி, ஊத்தங்கரை – 635 207. | |
| 10. | முதல்வர், அரசு மகளிர் கலைக் கல்லூரி, பர்கூர் – 635 104. | |
| 11. | சார்பதிவாளர், சார்பதிவகம், பர்கூர். | |

நகல்:

எஸ்டேட் அலுவலர்,

அரசினர் பொறியியற் கல்லூரி, பர்கூர்.

நகல்:

1. கல்லூரி இணையதள பொறுப்பாசிரியர்

   (கல்லூரி இணையதளத்தில் பதிவேற்றம் செய்யும் படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

2. முதல்வர் மேசை / மு.நே.உ /

   பொருளாளர் / க.கா - 3 / நி4 கோப்பு

27/2/25

முதல்வரின் நேர்முக உதவியாளர்
அரசினர் பொறியியற் கல்லூ.
பர்கூர்-635 104

27/2/25